# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 112/நகராட்சி/2017**

**நாள் : 24/12/2018**

**திரு K. ராஜாமணி,**
**கொடைக்கானல்** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**கொடைக்கானல் நகராட்சி,**
**கொடைக்கானல்** – **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், 17–67/A, கான்வென்ட் சாலை என்ற முகவரியில் வசிக்கும் திரு K. ராஜாமணி அவர்களின் 05.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 112/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. கொடைக்கானல் நகராட்சி நகர் நல அலுவலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல், 17–67/A, கான்வென்ட் சாலை என்ற முகவரியில் வசிக்கும் திரு K. ராஜாமணி என்பவர், கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் பொது இடம் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டடம் கட்டப் பட்டுள்ளதால் கழிவு நீர் வாய்க்கால் வழியாக செல்வது தடைபட்டு சாலையில் செல்கிறது என்றும், மண்சரிவு ஏற்பட்டு வாகனப் போக்குவரத்திற்கு தடங்கலாக உள்ளது என்று குறிப்பிட்டு புகைப்பட நகல்களை மட்டுமே சமர்ப்பித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து 27.06.2017 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு மனுதாரர் அழைக்கப்பட்டார். ஆனால், அன்றைய நாளில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் வருகை தரவில்லை. எனினும், நகராட்சி ஆணையர் சார்பாக நகர்நல அலுவலர் விசாரணைக்கு வருகை தந்து உரிய விளக்கம் அளித்தார். முறையீட்டு மனுதாரர் வசிக்கும் பகுதியில் மழைநீரும் கழிவு நீரும் தேங்குவது சம்பந்தமாக ரூபாய் பத்து லட்சம் மதிப்பீட்டில் பணி செய்வதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதென்றும், இதில் மூன்றில் ஒரு பங்கு பயனாளியின் பங்குத் தொகை பெறப்பட்டுள்ளதென்றும், நகராட்சியின் மன்ற ஒப்புதல் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நிர்வாக ஒப்புதல் பெற்று முறையான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுமென 27.06.2017 அன்று நடைபெற்ற விசாரணையின் போது நகர் நல

அலுவலர் தெரிவித்தார். மேலும், நில அளவை செய்து ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள பெட்டிக் கடை அகற்றப்படும் என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

3. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் போதுமான விவரங்களைக் குறிப்பிட்டு மனுச் செய்யவில்லை. புகைப்படநகல்களை மட்டுமே சமர்ப்பித்துள்ளார். எனினும், நகராட்சி நிர்வாகத்தினர் புகைப்படத்தில் சுட்டிக் காட்டியுள்ள இடங்களைக் கண்டறிந்து ஆக்கிரமிப்பினை அகற்றவும், கழிவு நீர் முறையாக செல்வதற்கும் உரிய திட்ட மதிப்பீடு செய்து சாலையை சீரமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். மேலும், ரூபாய் பத்து லட்சம் மதிப்பிலானத் திட்டப்பணிக்கு பயனாளியின் பங்களிப்பாக ரூபாய் 3.33 லட்சம் 23.06.2017 நாளிட்ட காசோலை மூலம் பெறப்பட்டுள்ளது. எனவே, முறையீட்டு மனுதாரின் முறையீடு குறித்து கொடைக்கானல் நகராட்சி நிர்வாகத்தினர் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ள நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **டிசம்பர்** திங்கள், **24–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

31/12/2018

செயலாளர்.

31/12/18

பெறுநர்

1. திரு K. ராஜாமணி,
   17–67/A கான்வென்ட் சாலை,
   கொடைக்கானல்,
   திண்டுக்கல் – 624 101.

2. நகராட்சி ஆணையர்,
   கொடைக்கானல் நகராட்சி,
   கொடைக்கானல்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி